<u>சார்பு நீதிமன்றம், சங்ககிரி</u>

<u>MCOP.No.395/2015</u>

எ.ம.சா.2

நாள். 12.06.2025.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சுஜாகரன் | மதம்: | இந்து |
| தகப்பனார்/<br>கணவர் பெயர்: | ரவிசங்கர் | ஜாதி: | --- |
| கிராமம்: | --- | வேலை: | நிர்வாக அதிகாரி |
| வட்டம்: | --- | வயது: | --- |

2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 12 ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய எ.ம.சா.2 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

<u>முதல் விசாரணை</u>

நான் 2 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் நிர்வாக அதிகாரியாக பணிபுரிகிறேன். 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். 10.01.2025 அன்று 2 ம் எதிர்மனுதாரர் சேலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகார் மனு மற்றும் அதன் அஞ்சல் ஒப்புகை அட்டை ஆகியவை முறையே எ.ம.சா.ஆ.2 மற்றும் எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்து ஏற்படுத்திய வாகனத்திற்கு எங்கள் நிறுவனத்தில் வழங்கப்பட்ட காப்பீடு விபத்து தேதியில் அமலில் இருந்தது என்றால் காப்பீடு அமலில் இருந்தது ஆனால் விபத்து ஏற்படுத்திய வாகனம் நாங்கள் காப்பீடு வழங்கிய வாகனமில்லை. விபத்து சம்பந்தமாக

23.06.2015 ல் மருத்துவமனையில் மயக்கம் தெளிந்த பின்பு கொடுத்த புகாரை பெற்று போலீசார் 30.06.2015 ல் தான் வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். TN 52 B 2634 என்ற பதிவெண் கொண்ட வாகனம் இந்த விபத்தில் சம்பந்தப்படவில்லை என்று எங்கள் நிறுவனத்திற்கு 2025 ஜனவரி மாதம் தெரியவந்தது. சாட்சி மீண்டும் 2015 ம் வருடமே தெரியும் என்று சொல்கிறார். ஆனால் 10 வருடங்களாக நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்தின் போது மனுதாரர் குடிபோதையில் இருந்தார் என்பதற்கு நாங்கள் எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1 ம் எதிர்மனுதாரர் மீது பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கில் குற்ற இறுதியறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.2 புகார் இழப்பீடு செலுத்தாமல் தப்பிப்பதற்காகவும் அல்லது காலதாமதப்படுத்துவதற்காகவும் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மனுதாரர்களுக்கு நாங்கள் இழப்பீடு செலுத்தக்கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

Sd/-சுஜாகரன்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.